பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 06 2025 **MONDAY** **7.15 PM**

## தலைப்புச் செய்திகள்

1. கல்வி சமத்துவத்தை உருவாக்குகிறது என்றும், ஜனநாயகத்திற்கு உயிர் கொடுக்கிறது என்றும் குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. வரலாற்று சிறப்புமிக்க ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தீவிரவாத அமைப்புகளிடையே அச்சத்தை விதைத்திருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் உலக நாடுகள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்று மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

4. சிரியாவில் நடந்த குண்டுவெடிப்பு தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர். 63 பேர் காயமடைந்தனர்.

5. 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Aditya Dileep Jadhav** மற்றும் **Hardeep** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<>>>>>>

கல்வி சமத்துவத்தை உருவாக்குகிறது என்றும், ஜனநாயகத்திற்கு உயிர் கொடுக்கிறது என்றும் குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் கௌதம புத்தா நகரில் இன்று நடைபெற்ற தேசிய துணைவேந்தர்கள் மாநாட்டில் அவர் பங்கேற்று பேசினார்.

தேசிய கல்விக்கொள்கை நாட்டின் கல்வி செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சி பயணத்தோடு பிணைந்திருப்பது மட்டுமின்றி, தேசிய பாதுகாப்பையும் கல்வி உறுதிபடுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு, காலநிலை தொழில்நுட்பம், குவாண்டம் அறிவியல் உள்ளிட்ட குறிப்பிட்ட துறைகள் சார்ந்த கல்வியை மாணவர்கள் பெறும் வகையிலான நடவடிக்கைகளில் கல்வி நிறுவனங்கள் ஈடுபட வேண்டும் என்றும், அதன்மூலம், உலக அரங்கில் இந்தியா தலைமை வகிக்கும் நிலை உருவாகும் என்றும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் இன்று பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலக சங்கத்தின் 47-ஆவது வருடாந்திர கூட்டம் நடைபெற்றது.

மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திருமதி நிர்மலா சீதாராமன், திரு அஷ்வினி வைஷ்ணவ், திரு கஜேந்திர சிங் ஷெகாவத், திரு தர்மேந்திர பிரதான் உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>>

வரலாற்று சிறப்புமிக்க ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தீவிரவாத அமைப்புகளிடையே அச்சத்தை விதைத்திருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆற்றிய உரைகளின் தொகுப்பாக அமைந்துள்ள **Wings to Our Hopes** தொகுதி இரண்டு நூலை புதுதில்லியில் இன்று அவர் வெளியிட்டு பேசினார்.

மகளிர் வளர்ச்சியை முன்நிறுத்தி மத்திய அரசு செயலாற்றி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

குடியரசுத் தலைவரின் உரைகள் அடங்கிய இந்த நூலானது வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டும் வகையில் மக்களுக்கு உத்வேகம் அளிப்பதாக அமையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கலாச்சாரம், கல்வி, சுகாதாரம், நாகரீகமயமாக்கம் உட்பட பல்வேறு அம்சங்கள் இந்த நூலில் அடங்கியிருப்பதாக திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<>>>>>

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் உலக நாடுகள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்று மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

அயர்லாந்து நாட்டின் **Cork**-ல் கனிஷ்கா விமான குண்டுவெடிப்பு தாக்குதலின் 40-ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார்.

1985-ஆம் ஆண்டு ஏர் இண்டியா விமானத்தில் கனடாவை சேர்ந்த தீவிரவாத அமைப்பு நடத்திய குண்டுவெடிப்பில் 80 குழந்தைகள் உட்பட 329 பேர் உயிரிழந்ததை அவர் நினைவுகூர்ந்தார்.

அந்த நிகழ்வு ஒரு விபத்து அல்ல என்றும், இந்தியாவை அச்சுறுத்தும் நோக்கில் பிரிவினைவாத அமைப்புகள் மேற்கொண்ட கொடூர செயல் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதமும், தீவிரவாதமும் கடந்த காலத்தில் மட்டுமல்லாமல், சமாதானத்திலும், அப்பாவிகளின் உயிருக்கு அச்சுறுத்தலாக விளங்குவதாக அவர் தெரிவித்தார்.

தீவிரவாத அச்சுறுத்தலை முறியடிப்பதில் இந்தியாவுடன் இணைந்து கனடா செயலாற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

தீவிரவாத அமைப்புகளுக்கான நிதிப்பகிர்வை தடுத்தல், உளவுத் தகவல்களை பகிர்தல் உள்ளிட்டவற்றில் இருநாடுகளும் ஒத்துழைப்பை பலப்படுத்த வேண்டும் என்று திரு ஹர்தீப் சிங் பூரி வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில், கனடா அமைச்சர் திரு **Gary Anandasangaree,** அயர்லாந்து பிரதமர் திரு **Micheal Martin,** மற்றும் இச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

<<<<<>>>>>

நான்கு மாநிலங்களின் ஐந்து சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டன. குஜராத்தின் **Kadi** தொகுதியில் பிஜேபி-யும், **Visavadar** தொகுதியில் ஆம் ஆத்மி-யும் வெற்றிபெற்றன.

கேரளாவின் நிலம்பூர் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றிபெற்றார்.

பஞ்சாபின் மேற்கு லூதியானா தொகுதியில் ஆம் ஆத்மி கட்சியும் மேற்குவங்கத்தின் **Kaliganj** தொகுதிக்கான இடைத்தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் வெற்றிபெற்றன.

<<<<<>>>>>

இனி,

மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள் . . .

சேவை, நல்லாட்சி, ஏழைகளின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு, கடந்த 11 ஆண்டுகளாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருவதன் காரணமாக நாடு பெரிய அளவிலான மாற்றங்களை கண்டுள்ளது.

இதுதொடர்பான செய்தித் தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது சிறுபான்மையினர் நலனுக்கான திட்டங்கள்.

## (வாய்ஸ் பைட் - ...58 .. செகண்ட்ஸ்)

*மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக சிறுபான்மையினர் நலனுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்து அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்காக 18 ஆயிரத்து 400 கோடி ரூபாய் செலவில் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.*

*தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகம் 752 கோடி ரூபாய் அளவிற்கு குறைந்த வட்டியில் கடனுதவிகளை வழங்கியுள்ளது.இதன்மூலம், ஒரு லட்சத்து 74 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர். ஹஜ் புனித பயணம் மேற்கொள்பவர்களின் வசதிக்காக கைபேசி செயலி ஒன்றையும் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.*

*வரலாற்று சிறப்புமிக்க வக்ஃப் திருத்தச்சட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. வக்ஃப் சொத்துக்களை டிஜிட்டல் மயமாக்குவதற்கான இணையதள சேவையும் தொடங்கப்பட்டுள்ளது.*

*புத்த மற்றும் பார்சி கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கான திட்டங்களையும் மத்திய அரசு செயல்படுத்தியுள்ளது. டிஜிட்டல் சீர்திருத்தங்கள், கலாச்சார பாதுகாப்பு, கடனுதவித் திட்டங்கள் போன்றவற்றை மத்திய அரசு தொடர்ந்து செயல்படுத்தி சிறுபான்மையினர் நலன்களை பாதுகாத்து வருகிறது.*

<<<<<>>>>>>

தூய்மை இயக்கத்தின் நோக்கங்கள் இளைய தலைமுறையினரை கவரும் வகையில் அமைய வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் தூய்மை இயக்க ஆட்சிக்குழுவின் முதல் கூட்டத்தில் இன்று அவர் பங்கேற்று பேசினார்.

கழிவுகள் மேலாண்மை, உள்ளாட்சி அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாடு மற்றும் தூய்மை இயக்க விழிப்புணர்வு பிரச்சாரம் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் அதன் எதிர்கால திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

<<<<<>>>>>>

நாட்டில் முழுமையாக எழுத்தறிவு பெற்ற மூன்றாவது மாநிலம் என்ற சிறப்பினை திரிபுரா பெற்றுள்ளது.

அகர்தலாவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அம்மாநில முதலமைச்சர் டாக்டர் மாணிக் சாஹா, இதனை அறிவித்தார்.

கல்வி கற்க காலம் மற்றும் வயது ஒரு தடையல்ல என்று அவர் தெரிவித்தார்.

2047–ல் வளர்ச்சியடைந்த இந்தியா எனும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையை செயல்படுத்துவதில், எழுத்தறிவு முக்கிய பங்கு வகிக்கும் என்று திரு மாணிக் சாஹா குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

ஈரானின் **Kermanshah** மாகாணத்தில் உள்ள ராணுவ கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இன்று ஈரான் மேற்கொண்ட ஏவுகணை தாக்குதலை முறியடித்ததாகவும், அதனைத் தொடர்ந்து இந்த வான்வழி தாக்குதலை நடத்தியதாகவும் அந்நாடு கூறியுள்ளது.

இந்த நடவடிக்கையில் 15 போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலில் உள்ள பல்வேறு நகரங்களை குறிவைத்து ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலை நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்கு இடையே மோதல் தொடர்ந்து வரும் நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு **Abbas Araghchi** இன்று மாஸ்கோ சென்றடைந்தார்.

மத்திய கிழக்கு பகுதியில் நிலவும் தற்போதைய சூழல் மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புடினை, அவர் சந்தித்து பேச இருப்பதாக அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>>

சிரியாவில் நடந்த குண்டுவெடிப்பு தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர். 63 பேர் காயமடைந்தனர்.

டமாஸ்கஸ் நகரில் உள்ள தேவாலயம் ஒன்றின் முன்பாக, வழிபாடு செய்துவிட்டு திரும்பிய பக்தர்கள் மீது இரண்டு நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும், தங்கள் உடலில் பொருத்தியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்ததாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள் உயிரிழந்திருப்பதாக அங்கு செயல்பட்டுவரும் ஒரு மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Aditya Dileep Jadhav** மற்றும் **Hardeep** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 48 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Aditya Dileep Jadhav** 12-4 என்ற புள்ளிக்கணக்கில் கிரிகிஸ்தானின் **Abdullaaziz Oibekovich Mominov** –ஐ வென்றார்.

110 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Hardeep** 7-3 என்ற புள்ளிக்கணக்கில் கிர்கிஸ்தானின் **Umar Ormanov** –வை வென்றார்.

------------

உஸ்பெகிஸ்தான் செஸ் கோப்பைக்கான போட்டியின் நான்காவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா நான்காவது இடத்தில் உள்ளார்.

**Tashkant-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இதுவரை அவர் மூன்று புள்ளிகளை பெற்றுள்ளார்.

------------

**'Leeds'** –ல் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று இந்தியா இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன்வரை 3 விக்கெட் இழப்பிற்கு 234 ரன் எடுத்துள்ளது

கே எல் ராகுல் சதம் அடித்தார், ரிஷப் பந்த் அரை சதம் எடுத்து விளையாடி வருகிறார.

**<<<<<>>>>>**